பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்படுத்தியாகவேண்டும். இன்று இருக்கக்கூடிய முறை மிகவும் மோசமானதாகும். எத்தனை கொலைகள், எத்தனை சண்டைகள், இன்னும் அந்தச் சண்டைகளின் விளைவாக பேச்சு வார்த்தைகள்கூட ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, இன்றுள்ள முறையை மாற்றி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

புதிதாக அமைக்கப்பட்ட நகரசபைகளுக்கு தேர்தல் நடக்காமல் இருக்கிறது. ஸ்பெஷல் ஆபீசர்கள் எக்கச்சக்கமாக டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். சிங்காநல்லூர், பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளைப் பற்றி எனக்குத் தெரியும். ஆகவே, உடனடியாக அந்தத் தேர்தலை நடத்தி போடப்பட்டுள்ள வரிகளைப் பற்றி புனர் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செப்பனிடப்பட்ட ஏரிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பது பற்றிச் சொன்னார்கள். அவற்றை அந்த அந்தப் பஞ்சாயத்துகளிடமே விடவேண்டுமே தவிர யூனியன்களிடம் விடக்கூடாது. அவர்களால் சரியான முறையில் கண்காணிக்கவும் முடியாது.

எனது தொகுதியில் பாப்பாநாடு-சோழகன்கரை ரோடில் ஒரு பாலம் செப்பனிடப்படவேண்டும். இது பத்து கிராமங்களின் ரோடு இணைப்பைப் பெற்றுள்ளது. நெல் கொண்டுபோகும் வசதி இதனால் பாதிக்கப்படுகிறது. எஸ்டிமேட் எல்லாம் போட்டு வந்திருக்கிறது. வெள்ளத்தினால் சேதம் அடைந்தது. இதையும் கட்ட முயற்சிக்கவேண்டும். கிராமப்புறங்களிலே ரோடு வசதிகள் சரியாக இல்லை. ரோடுகளை அமைப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிதிவசதிகள் போதுமானதாக இல்லை. ரோடு வசதிகளைச் செய்வதற்கு அவர்கள் இப்பொழுது கொடுக்கப்படுகிற நிதி வசதியைக்கொண்டு ரோடுகளை சரியான முறையில் டெவலப் பண்ண முடியவில்லை. பஞ்சாயத்துப் பகுதிகளோ நிறைய வாய்க்கால்கள் இருக்கக்கூடிய பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே, ரோடு வசதிகளை அதிகப்படுத்தவேண்டுமென்றால் நிறைய கல்வெர்ட்ஸ், பாலங்கள் எல்லாம் கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற நிதி வசதிகளை வைத்துக்கொண்டு ரோடு வேலைகளில் பாதிதான் செய்ய முடியும். ஆகவே நிறைய நிதி வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் தானியங்களை, நெல் போன்ற தானியங்களையும், விவசாயத்திற்கு வேண்டிய உரங்களையும் கூடுமான வரையில் சுலபமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையிலாவது தனியாகக் கவனஞ் செலுத்தி, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். பிற பகல் 1–30

மாண்புமிகு தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : இத்துடன் பேரவை கலைந்து மீண்டும் மாலை நான்கு மணிக்குக் கூடும். வணக்கம்.

(பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.) பிற பகல் 1–30

பேரவை மீண்டும் மாலை 4-மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் கூடியது.

6. அறிவிப்பு.

அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காக (Annamalai University Senate) இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்

பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது இரண்டு என்பதால், அல்ஹாஜ் ம.மு. பீர்முஹம்மது, திரு. என். ராஜாங்கம் ஆகிய இரு வேட்பாளர்களும் அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

* **திரு. ஏ. அ. சுப்பராஜா :** சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நகராட்சி சம்பந்தமாக நகராட்சித்தலைவர் என்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

டவுன் பிளானிங் ஸ்கீம் என்பது ஒரு பெரிய தலைவலி. அந்த ஸ்கீம் ஒரு நல்ல திட்டந்தான். இனிமேல் வளரக்கூடிய இடத்தில் அந்த ஸ்கீமைப் போட்டுவிட்டால் பிற்காலத்தில் புதிதாகக் கட்டக்கூடியவர்களுக்கு நல்ல விதத்தில் சட்டதிட்டத்தைப் போட்டு புகுத்திக் கொள்ளலாம். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு டவுன் பிளானிங் ஸ்கீம் ஏரியா என்று ஃபிக்ஸ் செய்தார்கள். பரம்பரையாக ஏழைகள் வீடு கட்டி இருக்கக் கூடிய இடங்கள் அந்த ஸ்கீமுக்குள் வந்து விடுகிறது. அவனுக்குப் பாட்டனர் காலத்தில் சம்பாதித்த சொத்து இருக்கும். 1 செண்ட், 2 செண்ட் என்று அவர்கள் பிரித்துக் கொள்ளுகிறார்கள். இந்த ஸ்கீம்படி வீடு கட்ட வேண்டுமென்றால் குறைந்த அளவு இத்தனை சதுர அடி இருக்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அந்த அளவுக்கு நிலம் இல்லையென்றால் அவ்வாறு குறைந்த அளவு நிலம் வைத்திருக்கக்கூடிய, பரம்பரையாக வைத்திருக்கக்கூடிய ஏழைகள் அந்த நிலத்தினைப் பக்கத்தில் இருக்கக்கூடிய பணக்காரர்களுக்கு விற்றுவிட வேண்டிய நிலை இருக்கிறது. இது சோஷலிசக் கொள்கைக்கே இடையூருக இருக்கிறது. ஏழைகள் ரொம்பக்கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு இடத்தை இந்த ஸ்கீமில் எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி முதலில் **Town-Planning Scheme area** என்று "நோடிப்பை" பண்ணிவிடுகிறார்கள். அது கவர்ன்மெண்ட் சாங்ஷன் ஆகி வருவதற்குள் 10 வருஷங்கள் ஆகிவிடுகிறது. அந்தப் பகுதியில் "அன்-ஆதரைஸ்டு கன்ஸ்ட்ரக்ஷன்" நடந்தால், அதை நிறுத்தப் போனால் சட்டப்படியாக இடிக்க முடியாது. அது டவுன் பிளானிங் ஏரியாதான். ஆயினும் கோர்ட்டுக்குப் போக இடம் உண்டு. இடிக்க முடியாது. இதற்காக இப்படிப் பலதரப்பட்ட சட்டங்களைப் போட்டும் திறமையாகச் செயல்பட முடியாமல் போய்விட்டது. இதைப் பற்றி மந்திரியவர்களிடம் என்னைப் போன்ற நகர சபைத் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்துக் கூறினோம். அவர்களும் சில திட்டங்களைக் கூறினார்கள். பரம்பரையாக உள்ள இடத்தையெல்லாம் "பில்ட் அப் ஏரியா" என்று ஒதுக்கிவிட்டு மீதி ஏரியாவை இந்த ஸ்கீமின் கீழ் எடுத்துச் செய்யலாம் என்று நல்ல முறையில் அவர்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். ரோட்டின் மேல் எல்லாம் வீடு கட்டுவதைச் சகிக்கக்கூடாது. அப்படி வீடுகள் கட்டுவதை எல்லாம் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டு, ஏழைகள் தங்களுக்கு இருக்கின்ற குறைந்த அளவு நிலத்தில் வீடு கட்டும் போது "அரை அடி குறைகிறது" என்று சொல்லி லைசென்ஸைக் கான்ஸல் பண்ணுவது சரியல்ல. இந்த "மாதிரி கான்டினுவஸ் அஃபென்ஸ்" என்று தினமும் கோர்ட்டுக்கு போக இருக்கிற காரணத்தால் முனிசிபல் தலைவர்களுக்கெல்லாம் இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையாகத்தான் இருக்கிறது. இந்த நிலைமை பெரிய தலைவலியாக இருக்கிறது. சட்டம் இருந்தால்கூட ஏழைகளுக்கு புரியவில்லை. நகரசபைத் தலைவர்கள் சொன்னல் செய்து விடலாம் என்ற நம்பிக்கை ; அந்த அளவுக்கு இருக்கிறார்கள். இதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்த வேண்டும். இந்த ஸ்கீம் ஏரியாக்களாக வீடுகள் இருக்கிற இடத்தை விட்டு விட்டு, வீடுகள் இல்லாத இடங்களை எடுத்துக் கொண்டு **(Scheme)** விதி முறைகளை "ஸ்ட்ரிக்ட்" ஆகச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.